**கொவிட் -19 கிழமை பாடசாலை (சப்ரகமுவ)**

**பாடம்- சுகாதாரம்**

**தரம் - 09**

**ஜனவரி -01 வது கிழமை**

## 01. <u>ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்</u>

எம்மைச் சூழவுள்ள நபர்கள்,சுற்றுப்புறச் சூழல் என்பன சமூகத்தின் பகுதிகளாகும்.அந்த சமூகத்தில் வசிக்கின்ற நபர்கள் சமமானவர்கள் அல்ல.

### <u>சமூகத்தில் ஒவ்வொருவரினதும் தேவைகள் வேறுபடுவதற்கான காரணிகள்</u>

01. பல்வேறு வயது மட்டங்கள்.
02. பல்வேறு தொழில்.
03. பல்வேறு சமயங்கள்.
04. பல்வேறு பொருளாதார நிலைமைகள்.
05. பல்வேறு திறமைகள்.
06. பல்வேறு இம்சைகள்.
07. பல்வேறு இடங்கள்.

<u>நாம் வாழும் சமூகத்திலுள்ள சுகாதார பிரச்சினைகள்</u>

01. சூழல் மாசடைந்தல்.
02. தொற்று நோய்கள்.
03. தொற்றாத நோய்கள் ஏற்படல்.
04. புகைப்பிடித்தல்.
05. போதைப் பொருட்களின் பாவணை.
06. விபத்துக்களும் அர்த்தங்களும் ஏற்படல்.
07. குற்றங்களும் துஷ்பிரயோகங்களும் காணப்பட்டல்.

01.**சூழல் மாசடைதல்**- நாம் வாழும் சூழல் எமக்கு ஏனைய விலங்குகளுக்கும் வாழ்வதற்கும் பொருத்தமற்ற இடமாக மாறும் நிலைமை சூழல் மாசடைந்த எனப்படும்.

02.**வளி மாசடைதல்**-தீங்கு விளைவிக்க கூடிய நச்சுப் பதார்த்தங்கள் வளிமண்டல த்தில் சேர்ந்து அதன் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக் வளிமண்டல மாசடைந்த எனப்படும்.

03.**நீர் மாசடைதல்**- நச்சுத் தன்மை கொண்ட அல்லது தீங்கு விளைவிக்கக் கூடிய பதார்த்தங்கள் நீரில் கலந்து நீரைப் பயன்படுத்த முடியாதவாறு அதன் இயல்பு தன்மையில் ஏற்படும் மாற்றம் நீர் மாசடைதல் எனப்படும்.

04. **நிலம் மாசடைதல்** - நிலத்தின் இயற்கை தன்மை மாற்றமடைந்த நிலம் பயன்படுத்தப்பட முடியாத நிலைமை.

05. **ஒலி மாசடைதல்** - மனிதன் காதுகளால் தாங்க முடியாத மிகையான இரைச்சலுடன் கூடிய ஒலியை உண்டாக்குதல்.

<u>பயிற்சி</u>

01. சூழல் மாசடைதலுக்குட்படும் சூழற்கூறுகள் எவை?
02. வளி மாசடைதல் காரணமாக ஏற்படும் நோய்கள் 03 தருக.
03. நீர் மாசடைதல் காரணமாக ஏற்படும் நோய்கள் எவை?
04. நிலம் மாசடைவதன் பாதகமான விளைவுகள் 04 தருக.
05. ஒலி மாசடைவதன் பாதகமான விளைவுகள் 04 எழுதுக.
06. சூழல் மாசடைவதன் காரணங்கள் 04 எழுதுக.
07. சூழல் மாசடைவதைத் தவிர்ப்பதற்காகன ஆலோசனை குறிப்பிடுக.